093

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள் சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNE5546/ESE5246- உள்ளடங்கல் வகுப்பறைக்கான சிறப்பான கற்றல் சூழலை உருவாக்குதல்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 15.08.2021 நேரம் : மு.ப 09.30 - ந.ப 12.30

## பகுதி I

1. விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்களின் சமூக, மனவெழுச்சி மற்றும் நடைத்தை சார் இடர்பாடுகள் ஆகிய பதங்களைச் சுருக்கமாக விளக்குக.

2. உள்ளடங்கற் கற்றல் சூழல் என்பதனால் நீர் கருதுவதை உங்களது சொந்த மொழிநடையில் சுருக்கமாக விளக்குக.

3. உட்படுத்தற் கல்வியினால் சாதாரண சகபாடிகள் எவ்வாறு நன்மை பெறுகின்றார்கள் என்பதை விளக்குக.

4. 'ஒழுங்கு' 'தண்டனை' ஆகிய பதங்களை ஒப்பிடுக.

5. உள்ளடங்கற் கல்விக்கான சமூக சூழலின் அவசியத்தை சுருக்கமாக விளக்குக.

6. உள்ளடங்கற் கல்வியின் ஆலோசர் மாதிரியை (Consultant Model) விபரிக்குக.

7. இலங்கையின் கல்வி முறைமையில் உள்ளடங்கற் கல்விச் செயன்முறையை அமுலாக்கம் செய்வதில் உள்ள சவால்களில் குறைந்தது ஐந்தினை (05) விளக்குக.

8. இலங்கையின் பாடசாலைகளில் உள்ளடங்கற் கல்வி முறையினை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் சேவைக்கால வாண்மை விருத்தியின் அவசியத்தை சுருக்கமாக விளக்குக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

i. உள்ளடங்கல் மாதிரிகளில் குறைந்தது மூன்றினை (03) பொருத்தமான உதாரணங்களை முன்வைத்துச் சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

ii. உப கல்வியலாளர் உதவும் முறைகள் (Para Educator Support Models) உங்களது பாடசாலையில் எவ்வாறு அமுல் படுத்துவீர் என்பதை உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(11 புள்ளிகள்)

10.

i. ஒரு பிள்ளையின் தனியாள் தேவைகளையும் விருப்புக்களையும் ஓர் ஆசிரியரானவர் எவ்வாறு தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. பாடசாலை வகுப்பறை ஒன்றில் காணப்படக்கூடிய கலைத்திட்ட மாறுபடுத்தல் தன்மைகள்/பண்புகள் யாவை?

(12 புள்ளிகள்)

11.

i. பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் உள்ளடங்கற் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை விளக்குக.

அ. கலைத்திட்டம்

ஆ. உதவித் தொழிநுட்பத்திற்கான அணுகளவு

இ. பெற்றோரின் மனப்பாங்கு

ஈ. பிள்ளையின் பிணிகாண் சோதனைகளை மேற்கொள்வதற்கான வாண்மையாளர்கள்/நிபுணர்களின் பற்றாக்குறை.

(20 புள்ளிகள்)

12.

i. கலைத்திட்ட மாறுபடுத்தல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

(10 புள்ளிகள்)

ii. ஆசிரியர்கள் கலைத்திட்ட மாறுபடுத்தல்களை மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

i. மாணவர்களின் தயார்நிலை என்பதால் நீர் கருதுவது யாதென உங்கள் சொந்த மொழிநடையில் விபரிக்குக.

(05 புள்ளிகள்)

ii. மாணவர்களின் தயார்நிலையை இணங்காண்பதற்கு பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் யாவை?

(07 புள்ளிகள்)

iii. உட்படுத்தல் வகுப்பறையொன்றில் விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்களின் தயார்நிலையை எவ்வாறு மேம்படுத்துவீர் என்பதை உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

14.

i. திட்டமிடல் கோபுரம் (Planning Pyramid) என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. கே. டபிள்யூ. எல் (K.W.L) முறை என்றால் என்ன என்பதை விபரித்து வெற்றிகரமான உட்படுத்தற் கல்வி முறையை மேம்படுத்துவதற்கு இம்முறையை எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*